திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, பாமணியில் அந்தத் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்ற முறையிலே அது அனுப்பப்பட்டது. அதற்கான பீஸிபிளிட்டி ரிப்போர்ட் எல்லாம் வந்தது. இப்போது இந்த அரசு அதை வலியுறுத்தத் தவறியதன் காரணமாகத்தான் மத்திய அரசு அதை ரொட்டீனாக மறுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசிடம் வலியுறுத்தாதது இந்த அரசின் தவறுதான். இவர்களுடைய தவறின் காரணமாக அது மறுக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களை வலியுறுத்துகிறீர்கள். சில விஷயங்களை வலியுறுத்துவதில்லை. ஆகவே இப்போதாவது அதை வலியுறுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; துணைத் தலைவர் அவர்களே, நான் திரு. சுப்பு சொன்னதிலிருந்து சற்று மாறுபடுகிறேன். இந்த அரசு வலியுறுத்தவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு மட்டுமல்ல, இந்த அரசோடு கூட்டுறவுத் துறையுடன் தொடர்பு கொண்டிருக்கிற தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட நமக்காக மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தியது. அதற்குப் பிறகும் மத்திய அரசு உரிமம் கொடுப்பதை மறுதளித்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு என்ன காரணத்தினால் அதை மறுதளித்தார்கள் ? நம்முடைய அரசு அதற்கான திட்ட முன் வடிவை—எத்தனை இலட்சம் ரூபாயில் அந்தத் தொழிற்சாலையைத் துவங்குவது என்ற விவரங்களை அங்கே அனுப்பினார்கள் ? ஏன் அவர்கள் மறுத்தார்கள் ? மீண்டும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் முறையில் நாம் நடவடிக்கை எடுக்க அரசிடம் என்ன யோசனை உள்ளது என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடுமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுப் பயிற்சிக்கான மையம்.

*523 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கூட்டுறவு பயிற்சிக்காக ' கூட்டுறவு மையம் ' ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

1979 மார்ச் 24]

(ஆ) அதற்கு மைய அரசு உதவித்தொகை வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) & (ஆ) ஆம்.

(இ) கூட்டுறவு பயிற்சி கல்லூரிக்காக ரூபாய் 47 லட்சங்கள் செலவில் கட்டட அமைப்பு ஒன்று அறிஞர் அண்ணா நகரில் முடிவுறும் நிலையில் உள்ளது. மைய அரசு இந்த கட்டட அமைப்பிற்காக ரூபாய் 10 இலட்சங்கள் உதவித்தொகை வழங்கியுள்ளது. மேலும் கல்லூரி முதல்வர் மற்றும் விரிவுரையாளருக்காகும் முழுச் செலவினையும் மத்திய அரசு, தேசியக் கூட்டுறவு பயிற்சி மன்றத்தின் மூலம் ஈடு செய்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பயிற்சிக்கு இவ்வாண்டு பெண்கள் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் தங்கும் விடுதி இல்லை என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டட அமைப்பு அறிஞர் அண்ணா நகரிலே நடைபெறுகின்ற முயற்சி முடிவுற்று இன்னும் இரண்டு மாதங்களுக்குள்—குறிப்பாக மே திங்கள் இறுதிக்குள்ளாக 'கோவாப்பரேட்டிவ் காம்ப்ளெக்ஸ்' என்ற அந்தக் கூட்டுறவு மையம் பேரறிஞர் அண்ணா நகரிலே திறக்கப்பட இருக்கிறது. அப்பொழுது பயிற்சி பெறுகின்ற பெண்கள் தங்குவதற்காக எல்லா வசதிகளும் அங்கே செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மையத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற அங்கத்தினர்கள் எத்தனை பேர் ? அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மையம் எப்பொழுதிலிருந்து நடைபெற்று வருகிறது ? மொத்தம் எத்தனை மாணவர்கள் அதில் படிக்கிறார்கள் ? இந்தப் பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்க அரசு ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது கட்டடத்தைப் பற்றிய பிரச்னை.

அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில், திருவண்ணாமலை.

*வினா 524.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்ததற்கு பிறகும் புதுப்பிக்கும் வேலைகள் நடைபெற்று வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதுப்பிக்கும் வேலைகள் எப்பொழுது முடிவடையும்?

(இ) புதுப்பிக்கும் வேலைகளுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத்தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 1976ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது அதன் பின் அவ்வாலயத்தின் வடக்கு ராஜ கோபுரத் திருப்பணியும், தெற்கு ராஜ கோபுரத் திருப்பணியும் 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

(ஆ) 1979ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இத்திருப்பணிகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இரண்டு திருப்பணிகளுக்கும் எதிர்பார்க்கப்படுகிற உத்தேசச் செலவு ரூ. 5,10,000.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் தேவஸ்தான திருப்பணி உத்தேச மதிப்பீட்டை விடக் கூடுதலான செலவினங்களைச் செய்து பணி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.